1978 ஏப்ரல் 7]

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, கடந்த டிசம்பர் மாதத்திற்குப் பின்னால், தொடர்ந்து 4 மாதங்களாக மழை பெய்யவில்லை. இப்பொழுதே வறட்சி ஆரம்பமாகி விட்டது. குளம், குட்டைகள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் காய்ந்து விட்டது. கிணறுகளிலே தண்ணீர் கீழே போய்க் கொண்டிருக்கிறது. எனவே. குடிநீர் நல்லமுறையிலே சப்ளை செய்வதற்காக, முன் ஜாக்கிரதையாக குடிநீர்த் திட்டத்தை வேகமாக அமுல் படுத்தும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதுபோல், 12 மாதங்களில் டைப் 1, 2 என்றுள்ள கிராமங்கள் அனைத்திற்கும் குடிநீர் கொடுக்கப்படும். அதிலே மாண்புமிகு உறுப்பினர் தொகுதியாகிய இளையாங்குடியும் ஒன்று.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்: சார், இப்போது குழாய்க் கிணறுகள் போட்டிருக்கின்ற இடங்களிலே எல்லாம், பல பஞ்சாயத்துக்களிலே நிதி நிலைமை இல்லாத காரணமாக, இந்தக் குழாய்கள் ரிப்பேர் ஆகாமல் தண்ணீர் எடுக்க இலாயக்கில்லாமல் இருக்கின்றது. இதை மனதிலே கொண்டு அமைச்சர் அவர்கள் கூறும்போது இதைப் பரீட்சார்த்தமாகப் பார்க்கப் போவதாகக் கூறினார்கள். இது குடிநீர் பிரச்னை. ஆகவே இந்த முக்கியமான பிரச்னையிலே நல்ல முறையிலே குடிநீர் கிடைக்க உடனடியாக சர்க்காரே ஏற்றுக்கொண்டு இந்த ரிப்பேர்களைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்கள் நகராட்சிகள் ஆகியவைகளிலே உள்ள நிதி ஆதாரத்தைவிட நம்முடைய தமிழக அரசினுடைய நிதி ஆதாரம் மோசமாக இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். எனவேதான் டைப் 1, 2 இப்போது எடுத்திருக்கிறோம். நிதி ஆதாரம் நல்லமுறையிலே சீரடையும் என்று கருதுகிறேன். அதன் பின்னர் இந்த 3, 4 இன்னுமுள்ள மற்றவைகள் எல்லாம் எடுத்து கொள்ளப்படும்.

* 831 வினா

விவசாய தொழிலாளர்களது ஊதியங்கள்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏராளமான இடங்களில் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களில் விவசாயத் தொழிலாளிகளுக்குக் குறைந்தபட்ச கூலி சட்டப்படி தானியமாக கொடுக்க வேண்டிய கூலி ரொக்கமாகத்தான் கொடுக்கிறார்கள் என்பது தெரியுமா?

(ஆ) இந்த நிலைமையை மாற்றி சட்டப்படி தானியமாகவும் ரொக்கமாகவும் கூலி கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: (அ) மற்றும் (ஆ) :—1969-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டத்திலும் 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்சக் கூலி சட்டத்தின்கீழ் விடுத்துள்ள அறிவிக்கையிலும் மிராசுதாரர்கள் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய கூலி ரொக்கமாகவும், தானியமாகவும் கொடுக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி பொதுவாக மிராசுதாரர்கள் விவசாயத் தொழிலாளர்களுக்கு, விவசாயக் கூலி, சாகுபடிக் காலங்களில் ரொக்கமாகவும், தானியமாகவும், அறுவடைக் காலங்களில் தானியமாகவே மட்டும் கொடுக்கிறார்கள். சாகுபடிக் காலங்களில் தானிய இருப்பு குறைவின் காரணமாக விவசாயக் கூலி ரொக்கமாகக் கொடுக்கப்பட்ட சம்பவங்கள் ஆங்காங்கு இருந்திருக்கின்றன. ஆனால் இவற்றில் விவசாயத் தொழிலாளர்களின் ஒப்புதலுடனேயே அவ்வாறு நடந்துள்ளது.

(முற்பகல் 9-10)

திரு. ஏ. செல்லப்பன்: விவசாயத் தொழிலாளர்களுக்குத் தானியமாகத் தந்தால் எவ்வளவு தர வேண்டும்? பணமாகக் கூலி தரும்போது எவ்வளவு தருகிறார்கள்? தானியங்கள் தரவேண்டுமென்று அரசு வற்புறுத்தி ஆணை பிறப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியச் சட்டத்தின் இரண்டாவது அனுபந்தத்தின் கீழே கூறியுள்ளபடி கூலி ரொக்கமாகவும், தானியமாகவும் கொடுக்கப்படுகிறது. ஆடவர்களுக்கு ரூபாய் 6 அல்லது 6 லிட்டர் நெல்லும் ரொக்கம் 2-3/4 ரூபாயும். பெண்டிருக்கு ரூ. 4 அல்லது 5 லிட்டர் நெல்லும் $1\frac{1}{2}$ ரூபாயும், அறுவடைக் காலத்தில் 54 லிட்டர் அறுவடை நெல்லுக்கு 6 லிட்டர் நெல் கொடுக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. சட்டப் பிரிவு 7-ன் படி, தானியமாகக் கொடுக்க வேண்டுமென்றால் சாகுபடி இல்லாத காலங்களில் சாத்தியம் இல்லை என்பதுதான் பதில்.

திரு. ரா. கிருஷ்ணன்: இந்த விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி கொடுக்கவேண்டுமென்ற சட்டத்தின்கீழ் கீழத் தஞ்சையில் மட்டும் கொடுக்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் கொடுக்கத் தயாராக இல்லை. ஒப்பந்தம் செய்யப்பட்ட தஞ்சை மாவட்டத்தில் கொடுக்கத் தயாராக இல்லை. ஒப்பந்தத்தை மீறுகிற, சட்டத்தை மீறுகிற நிலச்சுவான்தார்களைக் கைது செய்வது போன்ற நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்குமா?

1978 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சட்டத்தை மீறுகிறார்கள் என்ற தகவல் அளித்து அந்தத் தகவல் நிரூபிக்கப்பட்டால் அரசு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப் பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா: இந்தக் கூலி வழங்குகின்ற நேரத்தில் ஒரே வேலை செய்கிற ஆண்களுக்கு ஒரு கூலியும், பெண்களுக்கு ஒரு கூலியும் இருப்பதை மாற்ற அரசு முன்வருமா? அறுவடைக் காலங்களில் தானியங்களைக் கொடுத்துவிட்டு நடவுக் காலங்களில் தானியங்களைக் கொடுக்காமல் தானியங்களை வைத்துக் கொண்டிருப்பவர்களே இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறார்கள் அதைத் தடுத்து எல்லா நேரங்களிலும் தானியமாகக் கூலி கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசு என்பது பொதுவாகச் சட்டம் போடுகிற ஒரு அமைப்பு. சிலபேர் தானியங்களை எல்லாக் காலத்திலும் வைத்திருப்பார்கள். விவசாயிகளிடத்தில் எல்லா நேரங்களிலும் தானியம் இருக்காது. ஆகவே, தானியமாகத்தான் கொடுக்க வேண்டுமென்று கட்டுப்படுத்துவது சிலருக்குப் பாதகமாகக் கூட இருக்கும். ஆகையால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற யோசனை ஏற்கத்தக்கது அல்ல.

திரு. என். பழனிவேல்: விவசாயத் தொழிலாளர்களுக்குத் தானியமாகவும் பணமாகவும் கொடுக்கப்படுகிற கூலிச் சட்டம் கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இருப்பதாகத் தெரிகிறது. இதைத் தமிழகம் பூராவும் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு அமல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கீழத் தஞ்சையில் 1969 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சட்டம் அமுலில் இருக்கிறது. மற்றப் பகுதிகளில் 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்சக் கூலிச் சட்டம் அமலில் இருக்கிறது.

* 832 வினா—

கல்லூரிகளில் வேலை வாய்ப்பளிக்கும் கல்வி முறை

திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எந்தெந்த பல்கலைக்கழகத்தின கீழ் இயங்கும் கல்லூரிகளில் ''ஜாப் ஓரியன்டெட் கோர்ஸ்'' ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது?